# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2213/10 - 2021 පෙබරවාරි මස 02 වැනි අඟහරුවාදා - 2021.02.02

*2213/10 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.-பி. 21/78* (xvi) (A)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2020, ஒற்றோபர் 27.*

**கட்டளைச்சட்டம்**

*1.* இக்கட்டளைச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மனித வள முன்னேற்ற நிறுவகக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதியன்று வலுவுக்குவருதலும் வேண்டும்.

*2.* *(1)* (இதனகத்துப்பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) மனித வள முன்னேற்ற நிறுவகம் எனவறியப்படவேண்டியதுமான நிறுவகமொன்று அதன் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* நிறுவகமானது, (இதனகத்துப்பின்னர் “பல்கலைக்கழகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.


1A - PG 5295 — 175 (2021/02)



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கும், ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் என்பவற்றுக்கும் அமைய, நிறுவகமானது பின்வருவனவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும்;

(ஆ) (i) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய அங்கீகரிக்கப்பட்ட கற்றற் கிளைகளில் போதனையையும் பயிற்சியையும் வழங்குவதற்கும்;

(ii) மனித வள முன்னேற்றத்தின் ஏதேனும் கிளையில் ஆராய்ச்சியிலும் அபிவிருத்தியிலும் ஈடுபடுவதற்கும்;

(iii) மனித வள முன்னேற்றத்தின் ஏதேனும் கிளையில் கலந்தாலோசனையை வழங்குவதற்கும்.

(இ) பல்கலைக்கழகத்தின் பேரவையினது அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும், மனித வள முன்னேற்றத்தின் கற்றற் கிளைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும், திப்புளோமாக்களையும், சான்றிதழ்களையும் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகளையும், அவசியமானவிடத்து, தீர்மானிப்பதற்கும்;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட கற்றற் கிளைகளில் திறமை எய்தியுள்ள ஆட்களை நிச்சயிப்பதற்கான பரீட்சைகளை, பல்கலைக்கழகத்தின் பேரவையினது அங்கீகாரத்துடன் நடாத்துவதற்கும், அத்தகைய பரீட்சைகளில் தேறியுள்ளவர்களாகவும், நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் துணைவிதிகள்மூலம் பல்கலைக்கழகம் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தியவர்களாகவும் இருந்து, பல்கலைக்கழகத்தின் பட்டங்களும், திப்புளோமாக்களும், சான்றிதழ்களும் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகளும் அளிக்கப்படுவதற்குத் தகவுடையவர்களாகவுள்ள ஆட்களைப் பல்லைக்கழகத்துக்கு விதந்துரைப்பதற்கும்;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடையவையும், இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் உள்ளவையுமான பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன், ஆசிரியர்களையும், மாணவர்களையும் மற்றும் கல்விமான்களையும் பரிமாற்றல் என்றவகையாக அல்லது வேறுவகையாக, ஒத்துழைப்பதற்கும்;

(ஊ) துணைவிதியின்மூலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக, நிறுவகத்திலான அத்தகைய பரீட்சைகளுக்கும் கற்றல் அல்லது கற்கைக் காலப்பகுதிகளுக்கும் அல்லது அதன் அத்தகைய பாகத்துக்கும் சமமாகவுள்ளதாக, பல்கலைக்கழகங்களுக்கும் பல்கலைக்கழக மட்டத்திலான இடங்களுக்கும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு நாடுகின்ற ஆட்களினால், அல்லது நிறுவகத்தின் மாணவர்களினால் தேறப்பட்ட பரீட்சைகளையும் தொடரப்பட்ட கற்றல் அல்லது கற்கைக் காலப்பகுதிகளையும் ஏற்றங்கீகரிப்பதற்கும், அத்தகைய ஏற்றங்கீகாரத்தை எந்நேரத்திலும் மீளப்பெறுவதற்கும்;

(எ) போதனைசார், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அத்துடன் கலந்தாலோசனை நோக்கங்களுக்காக நூலகங்களையும், ஆய்வுகூடங்களையும், மற்றும் வேறு கட்டிடங்களையும், நிறுவகத்தின் நோக்கத்துக்காக நிறுவுவதற்கும், அவற்றுக்குச் சாதனமிடுவதற்கும், அவற்றைப் பேணுவதற்கும்;

(ஏ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சிரேட்ட பேராசிரியர் பதவிகளையும், பேராசிரியர் பதவிகளையும், இணைப் பேராசிரியர் பதவிகளையும், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகளையும், விரிவுரையாளர் பதவிகளையும் நிருவாகப் பதவிகளுட்பட்ட மற்றும் வேறு பதவிகளையும் தாபிப்பதனையும், இல்லாதாக்குவதனையும் அல்லது இடைநிறுத்துவதனையும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைப்பதற்கும்;

(ஐ) ஆராய்ச்சிப்படிப்புப்பரிசில்களையும், புலமைப்பரிசில்களையும், புலமைப்பொருளுதவிகளையும், உதவிப்பணங்களையும், பதக்கங்களையும் மற்றும் வேறு பரிசில்களையும் தாபிப்பதற்கும் அளிப்பதற்கும்;

(ஒ) ஏதேனும் துணைவிதிக்கிணங்க நிறுவகத்தினுள்ளும் வேறு உயர் கல்வி நிறுவனங்களினுள்ளும் கற்கைநெறிகளை அல்லது கற்கைநெறிகளின் பாகங்களை நடாத்துவதற்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்கும்;

(ஓ) ஏதேனும் விதிக்கிணங்கக் கட்டணங்களைக் கோருவதற்கும் பெறுவதற்கும்; அத்துடன்

(ஔ) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்வதற்கெனத் தேவைப்படக்கூடியவாறாக மேலே குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களின் இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினவான அத்தகைய வேறெல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்வதற்கும்.

4. நிறுவகத்தின் அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும்:-

(i) பணிப்பாளர்; அத்துடன்

(ii) எந்தப் பதவியை வகிப்பவர் இப்பந்தியின் நோக்கத்துக்காக அலுவலரொருவராக உள்ளாரோ அந்தப் பதவியொன்றாக உள்ளதெனக் கட்டளைச்சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட வேறேதேனும் பதவியை வகிப்பவர்.

5. (1) முதலாவது பணிப்பாளர், பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துப்பின்னரான ஒவ்வொரு பணிப்பாளரும் நிறுவகத்தின் முகாமைச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட மூன்று ஆட்களைக்கொண்டவொரு குழாத்திலிருந்து பல்கலைக்கழகப் பேரவையின் விதப்புரையின்மீது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், தொடர்ச்சியான இரு காலப்பகுதிகளுக்கு மேற்பட ஆளெவரும் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதலாகாது.

(2) உயர் கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவர் பணிப்பாளராக நியமிக்கப்படுமிடத்து, பணிப்பாளர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அத்தகைய நிறுவனம் அத்தகைய பணியாட்டொகுதி உறுப்பினரை விடுவித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது உபகட்டளைச்சட்டம் (4) இன்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவர் தமது அறுபத்தைந்தாவது ஆண்டைப் பூர்த்திசெய்யும்வரை, இவற்றுள் எது முன்னர் இடம்பெறுகின்றதோ அதுவரை, பதவிவகித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர், அந்நோக்கத்துக்காகக் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில், முகாமைச் சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலிரெண்டு பங்கினருக்குக் குறையாதோரினால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மீது பல்கலைக்கழகத்தின் விதப்புரையின்மீது ஆணைக்குழுவினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம். அத்தகைய விசேட கூட்டத்தில் சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அத்தகைய விசேட கூட்டத்திற்குத் தலைமைதாங்குவதற்கு, பணிப்பாளர் அல்லாத ஆளொருவரைத் தம்முள்ளிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(5) பதவிவிலகுகின்ற அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகின்ற பணிப்பாளர், பணிப்பாளராக அவரது நியமனத்துக்கு நேர்முன்னர் அவர் உயர் கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதி உறுப்பினரொருவராக இருந்திருப்பின், அவர் தமது அறுபத்தைந்தாவது ஆண்டைப் பூர்த்திசெய்திராதிருப்பின், அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தில் அவரது நிலையான பதவிக்குத் திரும்பச்செல்லலாம்.

(6) பணிப்பாளரானவர், லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை என்ற காரணமாக, அல்லது வேறேதேனும் காரணத்துக்காக, அவரது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருப்பின், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், கட்டளைச்சட்டம் 8 இன் பந்தி (ஆ)அல்லது (இ) இல் குறித்துரைக்கப்பட்டவாறு முகாமைச் சபையின் உறுப்பினர்களுளிருந்து உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

(7) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் இடம்பெற்றால், பல்கலைக்கழத்தின் துணைவேந்தர், உபகட்டளைச்சட்டம் (1) இன்கீழ் நிரந்தரமான நியமனமொன்று செய்யப்படும்வரை கட்டளைச்சட்டம் 8 இன் பந்தி (ஆ) அல்லது (இ) இல் குறித்துரைக்கப்பட்டவாறு முகாமைச் சபையின் உறுப்பினர்களுளிருந்து உறுப்பினரொருவரை நியமித்தல் வேண்டும்.

6. (1) பணிப்பாளரானவர் நிறுவகத்தின் முழுநேர அலுவலரொருவராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அதன் கல்விசார் மற்றும் நிருவாகத் தலைவராகவிருத்தலும் வேண்டும். அவர் முகாமைச் சபையினதும் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவினதும் பதவிவழி உறுப்பினரொருவராகவும் தவிசாளராகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன் ஒவ்வொரு கற்கைச் சபையினதும் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தலும் வேண்டும். நிறுவகத்தின் வேறேதேனும்

அதிகாரசபையின் அல்லது ஏதேனும் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமளிப்பதற்கும் உரையாற்றுவதற்கும் அவர் உரித்துடையவராதல் வேண்டும் ஆனால் அவர் அத்தகைய அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினரொருவராக இருந்தாலேயொழிய, அத்தகைய எவையேனும் கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(2) பணிப்பாளரானவர், பல்கலைக்கழகத்தின் பேரவையினால் அதற்கென அவருக்குக் காலத்துக்காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்கிணங்க, சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகள், அவை நிறுவகத்துடன் தொடர்புபட்ட அளவுக்கு, முறையாகக் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அந்நோக்கத்துக்காக அவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் அவர் கொண்டிருத்தலும் வேண்டும்; அத்துடன் அவற்றைப்பிரயோகிக்கலாம்.

(3) பணிப்பாளரானவர், முகாமைச் சபையின் முடிபுகளுக்குப் பயன்கொடுத்தல் வேண்டும் அல்லது பயன்கொடுக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(4) பணிப்பாளரானவர் நிறுவகத்தின் கணக்கீட்டலுவலராக இருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளரானவர், நிறுவகத்தினுள் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். பணிப்பாளர், தோதானபோதும் தோதானவிடத்தும், மாணவர்களின் ஒழுக்காற்றைப் பேணுதல் தொடர்பில் பேரவையிடமிருந்து பணிப்புகளை நாடலாம். பணிப்பாளர், பல்கலைக்கழத்தின் பேரவையினது ஒருப்பாட்டுடன் ஆசிரியர்களினதும் மற்றும் வேறு ஊழியர்களினதும் ஒழுக்காற்றைப் பேணுதலும் வேண்டும்.

7. நிறுவகத்தின் அதிகாரசபைகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(i) முகாமைச் சபை;

(ii) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழு;

(iii) கற்கைச் சபை அல்லது சபைகள்; அத்துடன்

(iv) அத்தகைய அதிகாரசபைகளாக இருக்கின்றனவெனக் கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

8. முகாமைச் சபையானது நிறுவகத்தின் நிறைவேற்று மற்றும் நிருவாக அதிகார சபையாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்:-

(அ) பணிப்பாளர்;

(ஆ) பல்கலைக்கழகத்தின் பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கலை, கல்வி, முகாமை மற்றும் விஞ்ஞான பீடங்களிலிருந்து மட்டுமான கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூன்று பீடாதிபதிகள்;

(இ) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அக்குழுவிலிருந்தான இரண்டு உறுப்பினர்கள்; அவர்களுள் ஒருவர் கற்கைச் சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும். மற்றவர், பல்கலைக்கழகத்தின் மூதவையினால் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவுக்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவராக இருத்தல் வேண்டும்;

(ஈ) கல்வி, உயர்தொழில்சார், வர்த்தக, கைத்தொழில், அறிவியற்சார் அல்லது நிருவாகத் துறைகளில் சிறப்புச் சேவையை அளித்துள்ள ஆட்களுளிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஏழு உறுப்பினர்கள். அத்தகைய உறுப்பினர்களுள் ஒருவர், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சின் செயலாளரினால் அதற்கு அனுப்பப்பட்ட பெயர்நியமனத்திலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

9. (1) முகாமைச் சபையின் தவிசாளரானவர் பணிப்பாளராகவிருத்தல் வேண்டும்; அவர் முகாமைச் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். பணிப்பாளரானவர் கூட்டமொன்றுக்குத் தலைமைதாங்க இயலாதவராகவிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்தில் தலைமைதாங்குவதற்குச் சமுகமளித்துள்ள எவரேனும் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத்திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலேயொழிய, மீளநியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், எவரேனும் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவுறுமுன்னர் தமது பதவியை வறிதாக்கினால், அவரது அடுத்துறுநர், அவர் முன்னரே தமது பதவியை வறிதாக்கினாலேயொழிய, அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) முகாமைச் சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினர், விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அல்லது பணிப்பாளருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான தொடர்பாடல்மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(4) வராமைக்கான அனுமதியின்றி முகாமைச் சபையின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகைதருவதற்குத் தவறுகின்ற முகாமைச் சபையின் எவரேனும் நியமிக்கப்பட்ட அல்லது பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினர், முகாமைச் சபையின் உறுப்பினராக அவரது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆணைக்குழுவானது கட்டளைச்சட்டம் 8 இன் பந்தி (ஈ) இல் குறித்துரைக்கப்பட்ட உறுப்பினர்களுளிருந்து அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரை நியமித்தலும் வேண்டும்.

(5) முகாமைச் சபையானது, குறிப்பிட்டவொரு நோக்கத்துக்காகவும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காகவும் எவரேனுமாளை முகாமைச் சபைக்குக் கூட்டுச்சேர்க்கலாம். அத்தகைய ஆள்,தேர்தலுக்காக நிற்பதற்கு அல்லது முகாமைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரிமையுடையவராதலாகாது.

(6) முகாமைச் சபையின் உறுப்பினர்களுக்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கவேண்டியவாறான அத்தகைய ஊதியம் அல்லது படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) முகாமைச் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலிரெண்டு பங்கினராதல் வேண்டும்.

(8) முகாமைச் சபையானது அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், ஒவ்வோராண்டிலும் எட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் அது கூடுதல் வேண்டும்.

(9) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதும்போதெல்லாம் அல்லது முகாமைச் சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலிரெண்டு பங்கினருக்குக் குறையாதோரிடமிருந்து எழுத்திலான கோரிக்கையொன்று அவரினாற் பெறப்பட்டதன்மேல் ஒரு வாரத்தினுள், முகாமைச் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

10. (1) சட்டத்தினதும், இக்கட்டளைச்சட்டத்தினதும், தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, முகாமைச் சபையானது, நிறுவகத்திலான போதனை, கல்வி, பரீட்சைகள், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அத்துடன் கலந்தாலோசனை என்பவற்றின் கட்டுப்பாட்டையும் பொதுப்பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) முகாமைச் சபையானது, உபகட்டளைச்சட்டம் (1) இனால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் வேண்டும்:–

(அ) நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், நிருவகிப்பதற்கும்;

(ஆ) சட்டத்தினதும் தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்துடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் தீர்மானிப்பதற்கும்;

(இ) குறிப்பிட்ட ஏதேனும் நோக்கத்துக்காக நிறுவகத்தின் கையாளுகையில் இடப்பட்ட எவையேனும் நிதிகளை நிருவகிப்பதற்கும்;

(ஈ) நிறுவகத்துக்கான விருப்பாவணவழிக்கொடைகளையும், நன்கொடைகளையும், மானியக்கொடைகளையும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெறுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும்;

(உ) நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையையும் வருடாந்தக் கணக்குகளையும் கவனத்துட்கொள்வதற்கும் அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும்;

(ஊ) நிறுவகத்தின் வருடாந்த நிதிசார் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கும் அவை அங்கீகரிக்கப்படுவதன்மேல் அத்தகைய மதிப்பீடுகளைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும்;

(எ) நிறுவகத்தினாற் பொறுப்பேற்கப்பட்ட கற்கைநெறிகள், கலந்தாலோசனைச் சேவைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் அத்துடன் பகிரங்க தனியார் பங்காண்மைச் செயற்பாடுகள் என்பவற்றை நடாத்துவதற்கான கட்டணங்களைக் கோருவதற்கும் பெறுவதற்கும்;

(ஏ) அங்கீகரிக்கப்பட்ட கற்றற் கிளைகளில் அளிக்கப்படவேண்டிய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகள், பின்பற்றப்படவேண்டிய கற்கைநெறிகளும் பயிற்சியும், தேறப்படவேண்டிய பரீட்சைகள் மற்றும் அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் அத்துடன் வேறு கல்விசார் தேர்ச்சிகளுக்காகத் தகைமைபெற விரும்பும் மாணவர்களினால் திருப்திசெய்யப்படவேண்டிய ஏனைய நிபந்தனைகள் என்பவற்றைக் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் கலந்தாலோசனையுடன் மூதவைக்கு விதந்துரைப்பதற்கும்;

(ஐ) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் கலந்தாலோசனையுடன், கற்கைநெறிகளும் பரீட்சைகளும் தொடர்பான துணைவிதிகளை வரைவதற்கும், சட்டமாக்கப்படுவதற்காகப் பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு அவற்றைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஒ) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவிடமிருந்தான அறிக்கைகளைக் கவனத்துட்கொண்டபின்னர், கற்கைநெறிகளும் பரீட்சைகளும் தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைவதற்கும், சட்டமாக்கப்படுவதற்காகப் பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு அவற்றைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஓ) எந்தக் கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் கருமத்துக்காக விதிகளை வரைவதற்கும், சட்டமாக்கப்படுவதற்காக, விடயத்துக்கேற்ப, பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு அல்லது பேரவைக்கு அவற்றைச் சமர்ப்பிப்பதற்கும்:

ஆயின், கல்விசார் கருமங்கள், பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான விதிகள், கல்விசார் ஒழுங்கிணைத்தற் குழுவின் கலந்தாலோசனையுடனும் அதிலிருந்தான அறிக்கைகளைக் கவனத்துட்கொண்டும் வரையப்படுதல் வேண்டும்;

(ஔ) நிறுவகத்தின் பணியை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்ட கட்டிடங்களையும், வளவுகளையும், தளபாடங்களையும், சாதனங்களையும் வேறு பொருட்களையும் வழங்குவதற்கும்;

(க) நிறுவகத்தின் தொழிலிலுள்ள ஆட்களை இடைநிறுத்தும்படியும் பதவிநீக்கும்படியும் அல்லது வேறுவகையில் தண்டிக்கும்படியும் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு விதந்துரைப்பதற்கும்;

(ங) நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் ஏற்றங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமானவாறான அத்தகைய ஆட்களைப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு விதந்துரைப்பதற்கும்;

(ச) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவிடமிருந்தான அறிக்கைகளைக் கவனத்துட்கொண்ட பின்னரும் பேரவையின் அங்கீகாரத்துடனும் பின்வருவனவற்றை ஆணைக்குழுவுக்கு விதந்துரைப்பதற்கும்:-

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறாகச் சிரேட்ட பேராசிரியர் பதவிகளையும், பேராசிரியர் பதவிகளையும், இணைப் பேராசிரியர் பதவிகளையும், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகளையும், விரிவுரையாளர் பதவிகளையும், நிருவாகப் பதவிகளுட்பட்ட மற்றும் வேறு பதவிகளையும் தாபிப்பதனையும் இல்லாதாக்குவதனையும் அல்லது இடைநிறுத்துவதனையும்;

(ii) நிறுவகத்துக்கு நியமிக்கப்படவேண்டிய ஆசிரியர்களினதும், அலுவலர்களினதும் ஏனைய ஊழியர்களினதும் தகைமை;

(iii) கற்கைச் சபைகளை மீள ஒழுங்குபடுத்துவதற்கான அல்லது புதிய கற்கைச் சபைகளை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டம்; அத்துடன்

(iv) ஆராய்ச்சிப்படிப்புப்பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், உதவிப்பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றுக்கான திட்டங்களும் நிபந்தனைகளும்;

(ஞ) அது அவசியமெனக் கருதக்கூடியவாறாக அத்தகைய எண்ணிக்கையினவான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக் குழுக்களை நியமிப்பதற்கும், அவற்றின் குறிப்பீட்டு நியதிகளைக் குறித்துரைப்பதற்கும், அவற்றின் அறிக்கைகளைக் கவனத்துட்கொள்வதற்கும், திரிபுடனோ அல்லது திரிபின்றியோ அத்தகைய அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரிப்பதற்கும்;

(ட) மாணவர்களைக் கற்கைநெறிகளுக்குச் சேர்த்துக்கொள்வதற்கான தேவைப்பாடுகளை, கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் கலந்தாலோசனையுடனும் பல்கலைக்கழத்தின் பேரவையினதும் ஆணைக்குழுவினதும் ஒருப்பாட்டுடனும் தீர்மானிப்பதற்கும்;

(ண) ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஏதேனும் பயன்படுத்தப்படாத வருமானமுட்பட நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை முதலீடு செய்வதற்கும்;

(த) நிறுவகத்தின் வேறெந்தத் தத்துவங்களின் பிரயோகத்துக்கு இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறேதேனும் தோதான சாதனத்தில் வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்படவில்லையோ அந்த வேறெல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கும்:

ஆயின், கல்விசார் ஒழுங்கிணைத்தற் குழுவுக்கு ஏதேனும் கல்விசார் கருமம்மீது அதன் அபிப்பிராயத்தைப் பதிந்து முகாமைச் சபைக்கு அனுப்புவதற்கான வாய்ப்பொன்று அதற்கு முதலில் அளிக்கப்பட்டிருந்தாலொழிய, முகாமைச் சபையானது அக்கருமம் தொடர்பாக ஏதேனும் தீர்மானத்தை நிறைவேற்றுதலாகாது:

ஆயின், மேலும் அவ்வாறு நிறைவேற்றப்பட்ட ஏதேனும் தீர்மானத்தின்மீது பல்கலைக்கழகத்தினது பேரவையின் அல்லது மூதவையின் ஒருப்பாட்டுடன்தவிர செயலாற்றப்படுதலாகாது.

இப்பந்தியில்,"கல்விசார் கருமம்" என்பது, கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் கட்டுப்பாட்டுக்கும் பொதுப்பணிப்புக்கும் அமைந்ததாகவுள்ள ஏதேனும் கருமம் என்று பொருளாகும்.

11. (1) பின்வருவோரைக் கொண்டுள்ள கல்விசார் ஒருங்கிணைத்தற்குழுவான்றிருத்தல் வேண்டும்:-

(அ) தவிசாளராகவிருக்கவேண்டிய பணிப்பாளர் ஒருவர்;

(ஆ) நிறுவகத்தின் கற்கைச் சபை ஒவ்வொன்றினதும் உறுப்பினர்களிடையேயிருந்து அத்தகைய ஒவ்வொரு சபையினாலும் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு சபையினதும் உறுப்பினர்கள் இருவர். அவ்வாறு பெயர்குறித்துநியமிக்கப்பட்ட உறுப்பினர்களுள் ஒருவர் அத்தகைய சபையின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்;

(இ) நிறுவகத்தின் முகாமைச்சபையினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்டவர்களும் முகாமைச் சபையின் உறுப்பினர்களிடையேயிருந்தானவர்களுமான உறுப்பினர்கள் இருவர். அவர்களுள் ஒருவர், கட்டளைச்சட்டம் 8 இன் பந்தி (ஈ) இன்கீழ் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுளிருந்தானவராதல் வேண்டும்;

(ஈ) பல்கலைக்கழகத்தின் மூதவையினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்களும், பல்கலைக்கழகத்திலிருந்தானவர்களும், விரும்பத்தக்கதாகச் சிரேட்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள் அல்லது இணைப்பேராசிரியர்கள் என்போராக இருக்கவேண்டியவர்களுமான ஆட்கள் இருவர்; அத்துடன்

(உ) கற்பித்தலில் ஈடுபட்டுள்ள நிறுவகத்தின் நிரந்தரமான ஆசிரியர்களுளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர்.

(2) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் தவிசாளர், பணிப்பாளராகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அவர் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதலும் வேண்டும். பணிப்பாளர், கூட்டமொன்றுக்குத் தலைமைதாங்க இயலாதவராகவிருப்பின், சமுகமளித்துள்ள உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குவதற்குச் சமுகமளித்துள்ள எவரேனும் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(3) எவரேனும் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமன அல்லது பெயர் நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளப்பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தேர்தலுக்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவுறு முன்னர் தமது பதவியை வறிதாக்கினால், அவரது அடுத்துறுநர், அவரது பதவியை அவர் முன்னரே வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) நிறுவகத்தின் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், பணிப்பாளருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான கோரிக்கைமூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(5) வராமைக்கான அனுமதியின்றி கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களுக்கு வருகை தரத் தவறுகின்ற கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் உறுப்பினரொருவராகத் தமது பதவியை வறிதாக்கியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

(6) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழு உறுப்பினர்களுக்கு முகாமைச் சபையினால் தீர்மானிக்கப்பட்ட அத்தகைய ஊதியம் அல்லது படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழு,முகாமைச்சபையின் ஒருப்பாட்டுடன், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்காகவும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காகவும் ஆளொருவரை அல்லது ஒருவருக்கு மேற்பட்ட ஆட்களைக் கூட்டுச்சேர்க்கலாம், ஆனால் அவ்வாறு கூட்டுச்சேர்க்கப்பட்ட எவரேனுமாள் தேர்தலுக்காக நிற்கவோ அல்லது அத்தகைய குழுவின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக்கவோ உரிமையுடையவராதலாகாது.

(8) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டும். அத்தகைய மூன்றிலொரு பங்கு ஒரு முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்கும் பட்சத்தில், அடுத்த உயர்வான முழுவெண்கூட்டநடப்பெண்ணாதல் வேண்டும்.

(9) கல்விசார் ஒருங்கிணைத்தற்குழுவானது அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், ஒவ்வோராண்டிலும் பத்துக்குக் குறையாத தடவைகளில் அது கூடுதல் வேண்டும்.

(10) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதும்போதெல்லாம் அல்லது கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்குக்குக் குறையாதோரிடமிருந்து எழுத்திலான கோரிக்கையொன்று அவரினாற் பெறப்பட்டதன்மேல் ஒருவாரத்தினுள், கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

12. சட்டத்தினதும், இக்கட்டளைச்சட்டத்தினதும், தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கல்விசார் ஒருங்கிணைத்தற் குழு பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) முகாமைச் சபையினாலும் ஏதேனும் கற்கைச் சபையினாலும் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கவனத்துட்கொள்ளுதலும் அதன்மீது அறிக்கையிடுதலும்;

(ஆ) கற்கைநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது பரீட்சைகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டனவாகவுள்ள கருமங்கள் தொடர்பில் விதப்புரைகளையும் அறிக்கைகளையும் முன்வைத்தலும்;

(இ) கல்விசார் கருமங்களைக் கவனத்துட்கொண்டு அவற்றின்மீது அறிக்கையிடும் நோக்கத்துக்காக, கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் உறுப்பினர்களாகவிராத ஆட்களைக்கொண்ட குழுக்களை நியமித்தலும்;

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட கற்றற் கிளைகளில் துணைவிதிகளினால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் தேறியிருந்தவர்களும், துணைவிதிகளினால் குறித்துரைக்கப்பட்ட வேறெவையேனும் நிபந்தனைகளைத் திருப்தி செய்தவர்களும், மனித வள முன்னேற்றத்தின் கிளைகளில் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் தேர்ச்சிகளின் அளிப்புக்காகத் தகவுடையவர்களுமான ஆட்களை முகாமைச் சபைக்கு விதந்துரைத்தலும்;

(உ) பின்வருவன பற்றி முகாமைச்சபைக்கு விதந்துரைத்தலும்:-

(i) கற்கை நெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான தகவுடைமை;

(ii) ஆசிரியர்களாக அல்லது பரீட்சகர்களாக ஏற்றங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்கள்;

(iii) அதனாற் கவனத்துட்கொள்ளப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட கற்றற் கிளைகளிலான கற்கைநெறிகளும் பரீட்சைகளும் தொடர்பான துணைவிதிகளையும், ஒழுங்குவிதிகளையும், விதிகளையும் வரைதல்;

(iv) கற்கைச் சபைகளை மீள ஒழுங்குபடுத்துவதற்கான அல்லது எவையேனும் புதிய கற்கைச் சபைகளை ஒழுங்குபடுத்துவதற்கான திட்டம்;

(v) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், உதவிப்பணங்கள், பதக்கங்கள், மற்றும் வேறு பரிசில்கள் என்பன அளிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்கள்:

ஆயின், இயைபான கற்கைச் சபையைக் கலந்தாலோசிக்காமல் முகாமைச் சபைக்கு ஏதேனும் விதப்புரை செய்யப்படுதலாகாது;

(ஊ) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவிற்கு அளிக்கப்பட்ட எந்தத் தத்துவங்களின் பிரயோகத்துக்கு இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது தோதான வேறேதேனும் சாதனத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட வில்லையோ அந்தத் தத்துவங்களின் இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினவான வேறெவையேனும் தத்துவங்களின் பிரயோகம்:

ஆயின், ஏதேனும் கல்விசார் கருமம் தொடர்பான ஏதேனும் தீர்மானம், இயைபான கற்கைச் சபை அதன்மீதான அதன் அபிப்பிராயத்தைப் பதிந்து கல்விசார் ஒருங்கிணைத்தற்குழுவுக்கு அதன் அபிப்பிராயத்தை அனுப்புவதற்கான வாய்ப்பொன்று அதற்கு முதலில் அளிக்கப்பட்டிருந்தாலொழிய, கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவினால் நிறைவேற்றப்படுதலாகாது:

ஆயின், மேலும், அவ்வாறு நிறைவேற்றப்பட்ட ஏதேனும் தீர்மானத்தின்மீது, விடயத்துக்கேற்ப, பேரவை, பல்கலைக்கழகத்தின் மூதவை மற்றும் நிறுவகத்தின் முகாமைச் சபை என்பவற்றின் ஒருப்பாட்டுடன்தவிர, செயலாற்றப்படுதலாகாது.

13. கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின், முகாமைச் சபையின் மற்றும் பல்கலைக்கழகத்தினது பேரவையின் விதப்புரையின்மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு கற்றற் கிளைதொடர்பிலும் நிறுவகமானது கற்கைச் சபையொன்றைத் தாபித்தல் வேண்டும்.

14. (1) ஒவ்வொரு கற்கைச் சபையும், அக்கற்கைச் சபையின் நிருவாக மற்றும் கல்விசார் தலைவராகவிருக்க வேண்டிய தவிசாளரொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். கற்பித்தலில் ஈடுபட்டுள்ளவர்களான நிறுவகத்தின் நிரந்தரமான ஆசிரியர்களுளிருந்து அவர் முகாமைச் சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் அக்கற்கைச் சபையின் உறுப்பினரொருவராகவும் இருத்தலும் வேண்டும்.

(2) ஒவ்வொரு கற்கைச் சபையினதும் தவிசாளர், சட்டத்தின், இக்கட்டளைச்சட்டத்தின் மற்றும் தோதான ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(3) வராமைக்கான அனுமதி, சுகவீனம் அல்லது வேறு காரணத்துக்காக, எவரேனும் தவிசாளர் மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருக்குமிடத்து, பணிப்பாளர், அத்தகைய காலப்பகுதிக்குத் தவிசாளர் பதவியில் செயலாற்றுவதற்கு இயைபான கற்கைச் சபையின் வேறோர் ஆசிரியரை நியமித்தல் வேண்டும். எவ்வாறாயினும், எவரேனும் தவிசாளர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவிவிலகுமிடத்து அல்லது வேறேதேனும் காரணத்துக்காக மூன்று மாதங்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, தவிசாளர் பதவி வறிதாகவுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் உப கட்டளைச்சட்டம் (1) இற்கிணங்கப் புதிய தவிசாளரொருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆள், அவருக்கு முன்னிருந்தவரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பாகத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

15. (1) ஒவ்வொரு கற்கைச் சபையும் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தவிசாளர்;

(ஆ) பணிப்பாளர்; அத்துடன்

(இ) இயைபான கற்றற் கிளையில் நிறுவகத்தில் போதனையளிக்கின்றவர்களுளிருந்து பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்பட்ட நிறுவகத்தின் முகாமைச் சபையினதும் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவினதும் ஒருப்பாட்டுடன் பணிப்பாளரினால் விதித்துரைக்கப்பட்டவர்களும், எண்ணிக்கையில் ஐந்தை விஞ்சாதவர்களும், இயைபான கற்றற் கிளையைச் சேர்ந்தவர்களுமான அத்தகைய ஆசிரியர்களும் வேறு பணியாட்டொகுதியினரும்.

(2) ஏதேனும் கற்கைச் சபையானது, முகாமைச் சபையின் ஒருப்பாட்டுடன், குறிப்பிட்டவொரு நோக்கத்துக்காகவும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்காகவும் தகைமை பெற்ற எவரேனுமாளைக் கூட்டுச்சேர்க்கலாம், ஆனால் அவ்வாறு கூட்டுச்சேர்க்கப்பட்ட எவரேனுமாள் தேர்தலுக்காக நிற்கவோ அல்லது அத்தகைய சபையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கோ உரிமை கொண்டிருத்தலாகாது.

(3) கட்டளைச் சட்டம் 9 இன் உப கட்டளைச்சட்டம் (2) இன் ஏற்பாடுகள், ஏதேனும் கற்கைச் சபையின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு கற்கைச்சபையும் செயலாளரொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவர் உப கட்டளைச்சட்டம் (1) இன் பந்தி (இ) இன்கீழ் அதன் உறுப்பினர்களுளிருந்து அச்சபையினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் கற்கைச் சபையின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண், கூட்டுச்சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் எவரேனுமிருப்பின் அவர்கள் நீங்கலாக, அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்கினராதல் வேண்டும்.

(6) ஒவ்வொரு கற்கைச் சபையும் அவசியமானபோதெல்லாம் கூடுதல் வேண்டும்; ஆயின், எவ்வாறாயினும், ஒவ்வோராண்டிலும் பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் அது கூடுதல் வேண்டும்.

16. சட்டத்தினதும், இக்கட்டளைச் சட்டத்தினதும், தோதான ஏதேனும் சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு கற்கைச் சபையும் பின்வருவனவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைக் கவனத்துட்கொள்வதற்கும் அதன்மீது அறிக்கையிடுவதற்கும்;

(ஆ) அக்கற்றற் கிளையிலுள்ள கற்கைநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகளுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்கள்மீதும் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவுக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் முன்வைப்பதற்கும்;

(இ) ஏதேனும் விசேட பாடத்தைக் கவனத்துட்கொண்டு அதன்மீது அறிக்கையிடும் நோக்கத்துக்காக, கற்கைச் சபையின் உறுப்பினர்கள் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமிப்பதற்கும்;

(ஈ) கற்கைநெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான தேவைப்பாடுகளைக் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவுக்கு விதந்துரைப்பதற்கும்;

(உ) அக்கற்றற் கிளையிலுள்ள கற்கைநெறிகளும் பரீட்சைகளும் தொடர்பாக ஒழுங்குவிதிகளை வரைவதற்கும் அவற்றைக் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவுக்குச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஊ) ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் ஏற்றங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களைக் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவுக்கு விதந்துரைப்பதற்கும்;

(எ) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், உதவிப்பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பவற்றுக்கான திட்டங்களையும் போட்டிகளுக்கான நிபந்தனைகளையும் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவுக்கு விதந்துரைப்பதற்கும்;

(ஏ) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைப்பொருளுதவிகள், உதவிப்பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசில்கள் என்பன அளிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைக் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவுக்கு விதந்துரைப்பதற்கும்; அத்துடன்

(ஐ) பின்வருவனவற்றைக் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவுக்கு விதந்துரைப்பதற்கும்:-

(i) ஏலவேயுள்ள கற்கைச் சபைகளை மீள ஒழுங்குபடுத்துவதற்கும் எவையேனும் புதிய கற்கைச் சபைகளை ஒழுங்குபடுத்துவதற்குமான திட்டங்கள்; அத்துடன்

(ii) முறையான கற்கைச் சபைகளுக்குக் கற்றற்கிளைகளைக் குறித்தளித்தல்.

17. (1) நிறுவகத்தினால் வழங்கப்பட்ட கற்கைநெறிகள் அல்லது கற்கைநெறிகளின் பாகங்கள் ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்தினுள் நடாத்தப்படுமிடத்து அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் அங்கீகாரத்துடன் மற்றும் முகாமைச் சபையினதும் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவினதும் அங்கீகாரத்துடன், அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர்களுளிருந்து ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிப்பதற்குப் பணிப்பாளர் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும் .

(2) பணிப்பாளரானவர், கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் அங்கீகாரத்துடனும் முகாமைச் சபையின் ஒருப்பாட்டுடனும், நிறுவகத்தினுள் நடாத்தப்பட்ட ஏதேனும் கற்கைநெறிக்காக அல்லது ஏதேனும் கற்கைநெறியின் பாகத்துக்காக, அதன் ஆசிரியர்களுளிருந்து அல்லது கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தொழிலுக்கமர்த்தப் படுகின்றவர்களும் வருகைதரு விரிவுரையாளர்களாக நிறுவனத்தில் வேலை செய்கின்றவர்களுமான ஆசிரியர்களுளிருந்து ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(3) ஒருங்கிணைப்பாளர், விடயத்துக்கேற்ப, முறையான கல்விசார் நிறுவனத்தினுள் அல்லது நிறுவகத்தினுள் நிறுவகத்தின் கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்களினதும் பரீட்சைகளினதும் ஒழுங்குபடுத்துகைக்கும் நிருவாகத்துக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(4) ஒவ்வோர் ஒருங்கிணைப்பாளரும் அவரது நியமனத் திகதியிலிருந்து கணிப்பிடப்பட்ட மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதுடன், பணிப்பாளரினால் ஓராண்டுக்கிரு தடவைகள் செய்யப்பட்ட செயல் நிறைவேற்றப் பரிசீலனையில் அறிக்கையிடப்பட்ட குறைவான செயல்நிறைவேற்றத்துக்காக அல்லது வேறேதேனும் காரணத்துக்காகப் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(5) வராமைக்கான அனுமதி, சுகவீனம், அல்லது வேறு காரணத்துக்காக எவரேனும் ஒருங்கிணைப்பாளர் ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலப்பகுதியொன்றுக்குக் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ள விடத்தும் -

(அ) அத்தகைய ஒருங்கிணைப்பாளர் உப கட்டளைச்சட்டம் (1) இன்கீழ் நியமிக்கப்படுமிடத்தும், பணிப்பாளர், அத்தகைய உயர் கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலரின் அங்கீகாரத்தின்மீது, அத்தகைய உயர்கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதியினருளிருந்து ஒருங்கிணைப்பாளரொருவரை நியமித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய ஒருங்கிணைப்பாளர் உப கட்டளைச்சட்டம் (2) இன்கீழ் நியமிக்கப்படுமிடத்தும், பணிப்பாளர், முகாமைச் சபையின் ஒருப்பாட்டுடன் கல்விசார் ஒருங்கிணைத்தற் குழுவின் அங்கீகாரத்தின்மீது நிறுவகத்தின் ஆசிரியர்களுளிருந்து அல்லது கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தொழிலுக்கமர்த்தப் படுகின்றவர்களும் வருகைதரு விரிவுரையாளர்களாக நிறுவகத்தில் வேலைசெய்கின்றவர்களுமான ஆசிரியர்களுளிருந்து ஒருங்கிணைப்பாளரொருவரை நியமித்தல் வேண்டும்.

(6) எவரேனும் ஒருங்கிணைப்பாளர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவிவிலகுமிடத்து,அல்லது வேறேதேனும் காரணத்துக்காக ஒரு மாதத்தை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராகவிருக்குமிடத்து, ஒருங்கிணைப்பாளர் பதவி வறிதாகவுள்ளதெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் விடயத்துக்கேற்ப, உப கட்டளைச்சட்டம் (1) அல்லது (2) இற்கிணங்கப் புதியவோர் ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

18. நிறுவகத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

19. (1) நிறுவகமானது, (இதனகத்துப்பின்னர் “நிதியம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) மனித வள முன்னேற்ற நிறுவக நிதியம் எனவழைக்கப்பட வேண்டிய நிதியமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். பின்வருவன அதனுட் செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) தோதான ஏதேனும் சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்துக்குச் செலுத்தப்படவேண்டிய எவையேனும் கட்டணங்கள்;

(ஆ) படிப்பூதியக்கட்டளையிலிருந்தான ஏதேனும் வருமானம்;

(இ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கான மானியக்கொடைகளாகப் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டவையும் ஆணைக்குழுவினால் செலுத்தீடு செய்யப்பட்டவையுமான எவையேனும் பணத்தொகைகள்;

(ஈ) நிறுவகத்தின் சுயநிதியளிக்கப்பட்ட செயற்பாடுகளினூடாகத் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் எல்லாம்; அத்துடன்

(உ) எத்தகையதுமான மூலத்திலிருந்தேனும் பெறப்பட்டவையும் நிறுவகத்துக்குச் சொந்தமானவையுமான வேறு பணங்கள் எல்லாம்.

(2) தோதான வருமானத் தலைப்புக்களின்கீழ் வகுப்பாக்கஞ் செய்யப்பட்டவையும், குறிப்பிடப்பட்டவொரு மாதத்தினுள் நிதியத்தினுட் செலுத்தப்பட்டவையும், நிறுவகத்தின் சுயநிதியளிக்கப்பட்ட செயற்பாடுகளினூடாகத் தோற்றுவிக்கப்பட்ட எல்லா வருமானமும் தவிர்ந்தவையுமான எல்லாப் பணத்தொகைகளினதும் பொழிப்பொன்று, அடுத்துவரும் மாதத்தின் முடிவுக்கு முன்னர் ஆணைக்குழுவின் தகவலுக்காகப் பணிப்பாளரினால் அதற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

20. பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்:-

(அ) நிறுவகத்தின் கணக்குகளைக் கட்டளைச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல்;

(ஆ) நிதியத்தினுட் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெறுதலும் அத்தகைய பணங்களை முறையான கணக்குத் தலைப்புக்களுக்கு வரவுவைத்தலும்;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல்; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறான அத்தகைய மூன்றாண்டுகளுக்கு ஒரு தடவையான மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டின் வருடாந்த நிதிசார் ஒதுக்கீடுகளையும் முகாமைச் சபைக்காகத் தயாரித்தல்:

ஆயின், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக அளிக்கப்பட்ட மானியக் கொடைகளிலிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான படிப்பூதியக் கட்டளைகளிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் வருமானம், நிறுவகத்தின் கணக்குகளில் தனிவேறாகக் கணக்குக்காட்டப்படுதல் வேண்டுமென்பதுடன் நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது படிப்பூதியக்கட்டளைகள் எந்த நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக அளிக்கப்பட்டனவோ அந்த நோக்கம் அல்லது குறிக்கோள் அல்லாத வேறேதேனும் நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவெதுவும் செய்யப்படுதலுமாகாது.

21. (1) நிறுவகமானது, ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விபரங்களைக் கொண்டதாகவும் அதன் செயற்பாடுகள் தொடர்பான வருடாந்தக் கணக்குக் கூற்றொன்றையும் புள்ளிவிபரங்களையும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப்புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

22. ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கு இயைபானவாறாகச் சட்டத்தின் பாகம் XIII இன் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலுக்கும் அது தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

23. (1) நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் வினைத்திறனான பிரயோகத்துக்கும், புரிகைக்கும், நிறைவேற்றுகைக்கும் அவசியமென அது பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் கருதக்கூடியவாறாக, நிறுவகத்தின் பணியாட்டொகுதி அத்தகைய அலுவலர்களையும், ஆசிரியர்களையும், வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, பல்கலைக்கழகத்தினால் அதன் சொந்தப் பணியாட்டொகுதியிலிருந்து விடுவிக்கப்படுவதன்மீது வழங்கப்படுதல் வேண்டும், அல்லது முகாமைச் சபையின் ஒருப்பாட்டுடன் பணிப்பாளரின் கோரிக்கையின்மீது, விடயத்துக்கேற்ப, ஆணைக்குழுவினால் அல்லது பல்கலைக்கழகத்தின் பேரவையினால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகள், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கான நியமனங்கள் தொடர்பாக ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் அலுவலர், ஆசிரியர் அல்லது வேறு ஊழியர் ஒருவர் முழுநேர அடிப்படையில் நிறுவகத்துக்கான சேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, நிறுவகமானது, பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவிக்குரிய சம்பளத்தையும் படிகளையும் அவருக்குச் செலுத்துதல் வேண்டும். வேறேதேனும் விடயத்தில், நிறுவகமானது, பல்கலைக்கழகப் பேரவையின் கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படியை அந்த அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியருக்குச் செலுத்தலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர், விடயத்துக்கேற்ப, பல்கலைக்கழகப் பேரவையின் அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தோராக இருத்தல் வேண்டும்.

24. எவரேனுமாள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா, பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது கூட்டுச்சேர்க்கப்பட்டுள்ளாராவென்பது பற்றி அல்லது எவரேனுமாள் நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு உரித்துடையவராகவுள்ளாராவென்பது பற்றி ஏதேனும் கேள்வி எழுமாயின், அத்தகைய கேள்வி ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்; அதன்மீதான அதன் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

25. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளமை காரணமாக மட்டும், அல்லது அத்தகைய உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளமை காரணமாக மட்டும், அதன் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

26. இக்கட்டளைச்சட்டத்தில் -

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் என்று பொருளாகும்;

"தோதான சாதனம்" என்பது, சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, கட்டளைச்சட்டம், துணைவிதி, ஒழுங்குவிதி அல்லது விதி என்று பொருளாகும்;

"அங்கீகரிக்கப்பட்ட கற்றற் கிளை" என்பது, நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மேல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முன்னேற்றத்தின் கல்விக்கு அல்லது பயிற்சிக்கு இயைபான ஏதேனும் கற்றற்கிளை என்று பொருளாகும்;

"சபை" அல்லது "முகாமைச் சபை" என்பது, இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட முகாமைச் சபை என்று பொருளாகும்;

"ஆணைக்குழு" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்;

"பேரவை" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவை என்று பொருளாகும்;

"உயர் கல்வி நிறுவனம்" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டவாறான அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்டவாறான ஒரு பல்கலைக்கழகம், வளாகம், திறந்த பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவகம் என்று பொருளாகும்;

"பிரதான நிறைவேற்று அலுவலர்" என்பது, -

(அ) ஒரு பல்கலைக்கழகம் தொடர்பாக, அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்று பொருளாகும்;
(ஆ) ஒரு திறந்த பல்கலைக்கழகம் தொடர்பாக, அத்திறந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்று பொருளாகும்;
(இ) ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி தொடர்பாக,அப்பல்கலைக்கழகக் கல்லூரியின் பணிப்பாளர் என்று பொருளாகும்;

"முதவை" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டவாறாகக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மூதவை என்று பொருளாகும்;

"ஆசிரியர்" என்பது, சட்டத்தில் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*27. கட்டளைச்சட்டத்தின் பொருள்கோடல் தொடர்பான ஏதேனும் கேள்வி, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்; அதன் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.*

*28. துணைவேந்தர், நிறுவகத்தின் பணிப்பாளரினது கலந்தாலோசனையுடன், இவ்வேற்பாடுகளைப் பொருள்கோடுவதிலான அல்லது நிறுவகத்தின் நிருவாகத்திலான அல்லது அவற்றுக்காக இக்கட்டளைச்சட்டத்தில் ஏற்பாடெதுவும் இல்லாதனவாக எழக்கூடிய சிரமங்கள் எவற்றையும் அகற்றும் நோக்கத்துக்கு அவசியமானவை அல்லது உசிதமானவையென அவருக்குத் தோன்றக்கூடியவாறாக, இக்கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அடிப்படையான நெறிகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கான அல்லது அத்தகைய பணிப்பை விடுப்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*29. 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதிய 68/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, வேலையாளர்கள் கல்வி நிறுவகக் கட்டளைச்சட்டம், அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.*

*02-283*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*